# TAMIL

*(Maximum Marks : 80)*

*(Time allowed : Three hours)*

*(Candidates are allowed **additional 15 minutes** for **only** reading the paper. They must NOT start writing during this time.)*

---

*Answer questions 1, 2 and 3 in Section **A** and **four** other questions from Section **B** on **at least three** of the prescribed textbooks.*

*The intended marks for questions or parts of questions are given in brackets [ ].*

---

## SECTION A

## LANGUAGE - 40 Marks

### Question 1

**Write a composition of approximately 400 words on any ONE of the topics given below :—** [15]

**பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றினைக் குறித்து 400 சொற்களுக்கு மிகாமல் கட்டுரை ஒன்றை எழுதுக :—**

(i) பெருகி வரும் வாகனங்களின் போக்குவரத்து வசதிக்காக சாலையை விரிவாக்கம் செய்தல், மேம்பாலங்கள் கட்டுதல் போன்றவற்றால் ஏற்படும் சாதக பாதகங்களை விளக்கி கட்டுரை ஒன்றை எழுதுக.

(ii) நெடுந்தூரம் பயணம் ஒன்றை மேற்கொண்ட போது உனக்கு ஏற்பட்ட அனுபவங்களை கட்டுரை வடிவில் தருக.

(iii) இன்றைய சூழ்நிலையில் தனிக் குடும்பமே சிறந்தது இக் கருத்தை ஏற்று அல்லது மறுத்து உனது கருத்துகளைக் கட்டுரையாக்குக.

(iv) உங்கள் பள்ளியின் இலக்கிய மன்ற விழாவிற்கு வருகை புரிந்த கல்வி அமைச்சரை சந்தித்து அவருடன் நீ உரையாடியவற்றை கட்டுரையாக எழுதுக.

(v) 'தூய்மை இந்தியா' இயக்கம் பற்றியும், காந்தியடிகளின் எண்ணங்கள் இதில் எவ்வாறு செயல்படுத்தப் பட்டுள்ளது என்பதையும் தெளிவு படுத்தி கட்டுரையை எழுதுக.

---

(vi) கீழ் வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றுக்கு மூலச் சிறுகதையை எழுதுக:-

(a) ............... இப்படியாக எனது முதல் சமையல் அனுபவம் முடிந்தது என்று முடியும் வரிகளில் கதை ஒன்றை எழுதுக.

(b) 'நான் இந்த உதவியை என் வாழ்நாளில் மறக்கவே மாட்டேன்' என்று தொடங்கும் வரிகளில் கதை ஒன்றை எழுதுக.

**Question 2**

**Read the passage given below and answer the questions that follow :—**

**பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துணர்ந்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி :—**

பழம் பெருமை வாய்ந்தது பாரத நாடு. வடக்கே இமயமலை முதல் தெற்கே குமரிமுனை வரையுள்ள இப்பரந்த நாட்டிலே மொழிகள் பல உண்டு. மதங்கள் பல உண்டு. இனங்கள் பல உண்டு. ஆயினும் பாரதப் பண்பாடு ஒன்றே. இத்தகைய பண்பாட்டின் ஒருமைப் பாட்டை உணர்த்துகின்றது தமிழிலக்கியம். பாரத நாட்டிலுள்ள வட மொழிக்கும் தென் மொழிக்கும் எந்நாளும் பிணக்கமில்லை. இரு மொழிகளும் இறைவன் அருளால் தோன்றினர்; ஆன்றோர் சேவையால் சிறந்தன; இம்மை இன்பமும் மறுமையின்பமும் தருவன. ஆதலால், 'இரு மொழியும் நிகர் என்னும் இதற்கு ஐயமுளதேயோ' என்று பாடினார் வடநூற் கடலையும் தென்னூற் கடலையும் நிலைகண்டு உணர்ந்த சிவஞானமுனிவர்.

வடநாட்டிலும் தென்னாட்டிலும் மதுரை என்னும் பெயருடைய திரு நகரம் உண்டு. வட மதுரையில் அவதரித்தார் கண்ணபிரான்; தென் மதுரையில் புகழ்பெற்றார் திருவள்ளுவர். கண்ணன் அருளிய கீதையும், வள்ளுவர் இயற்றிய குறளும், உலகம் போற்றும் உயரிய ஞான நூல்கள், 'இவ்விரண்டையும் அச்சாக உடையது பாரத ஞானரதம்' என்னும் கருத்தை அமைத்துப் பாடினார் ஒரு பழங்கவிஞர். பழங்காலத்தில் வடக்கே கங்கை நதிக்கரையிலும் தெற்கே கெடில நதிக்கரையிலும் பாடலிபுத்திரம் என்னும் நகரங்கள் இருந்தன. வடநாட்டுப் பாடலிபுத்திரம் அசோகர் காலத்தில் புகழ் பெற்று விளங்கியது. தென்னாட்டுப் பாடலிபுத்திரம் பல்லவர் காலத்தில் சிறந்து விளங்கியது. வடநாட்டுப் பாடலிபுத்திரம் பாட்னா என்றும், தென்னாட்டுப் பாடலிபுத்திரம் திருப்பாதிரிப்புலியூர் என்றும்

இப்போது வழங்குகின்றன. பாடலி என்பது பாதிரி மரத்தைக் குறிக்கும் வட சொல்லாகும். திருப்பாதிரிப்புலியூர் இறைவன் பாடலீசுரர் என்றே இன்றும் வழங்கப்படுகிறார்.

பாரதநாட்டுப் புண்ணியத் தலங்களுள் காசி என்னும் வாரணாசியும், இராமேச்சுரமும் தலை சிறந்தன என்பது தக்கோர் கொள்கை. இந்திய நாட்டுத் தென்கோடியில் உள்ள இராமேச்சுரத்தை நாடிவருவார் வடநாட்டார். காசியிலுள்ள விசுவநாதரை வழிபடச் செல்வர் தென்னாட்டார்.

நதிகள் ஒன்றுகூடும் துறைகளைப் புனிதமான இடங்களாகக் கருதிப் போற்றுதல் பாரத நாட்டுப் பண்பு. கங்கையும் யமுனையும் சரஸ்வதியும் கூடும் இடம் திரிவேணி சங்கமம் என்று வட நாட்டில் அமைக்கப்படுகின்றது. தமிழ் நாட்டில் புண்ணிய நதிகள் கூடுமிடங்கள் பல உள்ளன. அத்தகைய இடங்களை முக்கூடல் என்று வழங்குவர் தமிழ் மக்கள். தென்பாண்டி நாட்டில் பொருநையாறும் சிற்றாறும் கயத்தாறும் ஒன்றுசேர்கின்ற இடம் முக்கூடல் என்னும் பெயர் கொண்டு முற்காலத்தில் சிறந்திருந்தது. காஞ்சிமாநகரத்திற்கு அருகே பாலாறும் சேயாறும் கம்பையாறும் சேர்கின்ற இடம் திருமுக்கூடல் என்னும் பெயர் பெற்றுள்ளது. திரிவேணி சங்கமம் என்றாலும் முக்கூடல் என்றாலும் பொருள் ஒன்றே. ஐந்து ஆறுகள் பாயும் வளநாட்டிற்குப் 'பஞ்சாப்' என்று பெயரிட்டனர் வடநாட்டார். தென் நாட்டில் அத்தகைய நாடு ஐயாறு என்று அழைக்கப்பட்டது. திருவையாறு என்பது இப்போது ஓர் ஊரின் பெயராக அமைந்துள்ளது. பஞ்சநதம் என்பதும் அதுவே.

**கேள்விகள் :-**

(i) பாரதப் பண்பாடு ஒன்றே என்பதனைச் சிவஞானமுனிவர் எங்ஙனம் புலப் படுத்தினார் ? [4]

(ii) வடநாட்டிலும் தென்னாட்டிலும் உள்ள மதுரை நகரங்களின் சிறப்பை விளக்குக. [2]

(iii) பாடலிபுத்திரம் என்னும் பெயர்கொண்ட இரு பழைய நகரங்களில் ஏதேனும் ஒன்றின் வரலாற்றை எழுதுக. [2]

(iv) பாரதநாட்டுப் புண்ணியத்தலங்களுள் தலை சிறந்தன யாவை ? [2]

(v) ஆறுகள் கூடுமிடங்கள் வடக்கிலும் தெற்கிலும் எவ்வாறு சிறப்பிக்கப் படுகின்றன ? [5]

**Question 3**

**(i) Correct the following sentences :—**

**பின்வரும் வாக்கியங்களைப் பிழையற எழுதுக :—**

(a) நாம் வால்கின்ற வீட்டிள் கதிரவனின் ஒலியும் நல்ல காற்ரும் நிரைந்திருக்க வேண்டும். [2]

(b) அப்பா எந்நை காடைக்குப் பொகச் சொன்னது. [2]

(c) உடற்பயிர்சியாள் ஆறோக்கியம் வழிமை அலகு ஆகிய நண்மைகல் கிடைக்கின்ரன. [2]

**(ii) Use the following in sentences of your own :—**

**கீழ்க்காணும் இணைச் சொற்கள், மரபுத் தொடர், உவமைத் தொடர்களுக்கு தகுந்த வாக்கியம் அமைத்து எழுதுக :—** [4]

(a) ஓங்கி உயர்ந்த

(b) எருது நோய் காக்கைக்குத் தெரியுமா ?

(c) கடலில் கரைத்த பெருங்காயம் போல

(d) கள்ளம் கபடு.

## SECTION B

## PRESCRIBED TEXTBOOKS - 40 Marks

*Answer **four** questions from **at least three** of the prescribed textbooks.*

*பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **நான்கனுக்கு** உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள **மூன்று** பாடப்புத்தகங்களிலிருந்து விடையளி.*

### பொதுத் தமிழ் (செய்யுள்)

**Question 4**

வினைத்திட்பம் என்னும் தலைப்பில் திருவள்ளுவர் கூறியுள்ள ஏதேனும் 8 கருத்துகளை எழுதுக ? [10]

**Question 5**

கண்ணகியின் சூளுரையும் நகர் மாந்தர் மயங்கிக் கூறியனவும் யாவை ? [10]

**Question 6**

குழந்தைத் தொழிலாளர் அவல நிலையைக் கவிஞர் அப்துல் ரகுமான் கூறுமாறு தொகுத்து வரைக. [10]

## கதைக் கோவை

**Question 7**

வேலி - இக்கதையில் வரும் நிகழ்ச்சியை உரையாடலாக எழுதுக. [10]

**Question 8**

ஒவ்வொரு கல்லாய் - இக்கதையைக் கருப்பொருளும் சுவையும் சிதையாமல் சுருக்கி எழுதுக. [10]

**Question 9**

சட்டை - இக்கதையின் தலைமை மாந்தர் பூந்தோட்டத்துச் சாமியின் பண்பு நலன்களை ஆய்க. [10]

## சிநேகிதி

**Question 10**

தன்னை விரும்பிய காந்தத்தின் மனதை மாற்ற துரை எடுத்துக் கொண்ட முயற்சியினை, அவர்கள் இருவரின் உரையாடல் மூலமாக விளக்குக. [10]

**Question 11**

சிநேகிதி என்னும் இப்புதினம் நமது மனத்தை விட்டு நீங்காமல் நிற்க அகிலன் கையாண்டுள்ள நெறிகளையும் உத்திகளையும் விளக்குக. [10]

**Question 12**

நாராயணசாமி தன் முடிவான தீர்மானத்தை எவ்வாறு கடிதம் மூலமாக வெளிப்படுத்தியிருந்தார்? [10]

## யான் கண்ட இலங்கை

### Question 13

இலங்கை வாழ் மக்களின் வாழ்க்கையினைப் பற்றியும் அவர்களின் நடை உடை அணிகலன்களைக் குறித்தும் டாக்டர் மு.வ வழி நின்று விளக்குக. [10]

### Question 14

சிங்கள அரசர்களும் தமிழ் வேந்தர்களும் எவ்வெவ் வகையில் வேறுபடுவதாக மு.வ உணர்த்துகிறார்? [10]

### Question 15

'தம்பளை' - குகைக் கோவிலைப் பற்றி நீ உணர்ந்தவற்றை சுருக்கமாக எழுதுக. [10]